**09.02.2026**

**MCOP. No.161/2022**

**ம.சா. 1 – திரு.விஜயராகவன்.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.**

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 11.45 மு.ப**

விபத்தின்போது நான் போடி நோக்கி சென்றேன். நான் போடி நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது விபத்து நடந்ததா என்றால் நான் சாலையின் இடது ஓரத்தில் நின்று செல்போன் பேசிக்கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது. மேற்கூரிய விபரத்தைதான் நான் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை தேசிய நெடுஞ்சாலை என்றால் எனக்கு தெரியாது. நான் செல்போன் பேசிக்கொண்டே வாகனத்தை வலது புறம் ஏறிச்சென்றபோதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் நான் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. நான் க.விலக்கு அரசு மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சை பெற்று மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தபோது இரண்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டன. நான் தற்பொழுதும் வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். விபத்து காயங்களினால் எனக்கு எதிர்கால பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகவில்லை. இன்று நீதிமன்றத்திற்கு பேருந்தில் வந்தேன். எனக்கு மருத்துவ சிகிச்சை முடிந்து பூரணமாக குணமடைந்த பிறகுதான் விடுவித்தார்கள் என்றால் சரியல்ல எனக்கு பார்வையில் பொருட்கள் இரண்டாக தெரிகிறது. விபத்து காயங்கள் எனக்கு பூரணமாக குணமடைந்துவிட்டது என்றும் அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் முதலில் I.T துறையில் வேலை பார்த்தேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். மனுவில் நான் I.T துறையில்



SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.09 15:01:59 +0530

வேலை செய்து வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வருமானத்தை மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாகன உரிமையாளர் காப்பீட்டு நிபந்தனைகளை பின்பற்றாததால் அவருக்கு பொறுப்பேற்று இழப்பீடு தர 3ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 11.53 மு.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.09 15:02:04 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 09.02.2026